www.tamilarangam.net

# சூழ்ச்சிகள் பலவிதம்

ஆமாம் நேயர்களே! நீங்கள் கேட்டுக்கொண்டிருப்பது தமிழினத்தின் வீரத்தைக் கொச்சைப்படுத்தும் **sunrise** (சண்ரைஸ்) வானொலியின் தமிழ் ஒலிபரப்பு

இன்று ஐரோப்பிய நாடுகளில் கேட்கக்கூடியதாக Sunrise தமிழ்ச்சேவை என்ற பெயரில் ஒலிபரப்பப்படும், இவ் வானொலி தமிழ் மக்களின் சேவையாக இருக்கும் என்ற எம்மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏமாற்றமாக இன உணர்வே அற்று இயங்கிவருகிறது.

எமது தாயகத்தில் எத்தனையோ இழப்புக்கள், அழிவுகள் மத்தியில், வான் வரையில் வளர்ந்துநிற்கும் தமிழ்த்தேசியத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் தமிழீழ வெற்றிகளையும், சாதனைகளையும், மழுங்கடித்தும், புறக்கணித்தும் தமது ஒலிபரப்புக்களை இலண்டனில் நடாத்தி வருகிறது.

புலம் பெயர்ந்து வாழும் தமிழருக்கென வழங்கப்பட்டுள்ள இச்சேவை தரமான முறையில் தமிழரின் கலை பண்பாடுகளைப் பிரதிபலிக்காமல்; தமிழீழச் செய்திகளைக் களங்கப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் தேசியப் பற்றுள்ள எமது வீரப்பரம்பரைக்கே கரிபூசவும் முயலுகிறது.

**சிங்களப் பேரினவாதத்திற்கும் வீரத்தமிழினத்துக்குமிடையில் போராட்டம்; இதற்குவேறு "நடுநிலமையாம்" தமது சேவை என்று கூறிக்கொண்டு, எதிரிகளின் ஊடகமாகத் தமிழினத் துரோகத்துக்குத் துணைபோகும் இதுபோன்ற சூழ்ச்சிகளை யிட்டு விழிப்புடன் இருப்போமாக!**

எமது தூய சக்திகளை ஒன்றுதிரட்டி இதற்கான அடுத்தகட்டத்தை நிர்ணயிக்க நாம் உங்களுடன் மீண்டும் தொடர்புகொள்வோம்.

**ஐரோப்பியா வாழ் தமிழ்த் தேசிய விழிப்புக் குழு**